# Kanchipuram Dt

## காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | வரலாறு | மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-** 20×1=20

1) "சுயராஜ்யம்" எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" - எனக் கூறியவர்

அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி

இ) சுபாஷ் சந்திரபோஸ் ஈ) பாரதியார்

2) "இந்தியாவில் வறுமையும், பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்" (Poverty and Un-British Rule in India) என்ற நூலை எழுதியவர்

அ) பாலகங்காதர திலகர் ஆ) கோபால கிருஷ்ண கோகலே

இ) தாதாபாய் நௌரோஜி ஈ) எம்.ஜி.ரானடே

3) ஒரிசா பஞ்சம் குறித்த பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எவை/எது?

கூற்று 1: 1866 ஆம் ஆண்டில் ஒன்றரை மில்லியன் மக்கள் ஒரிசாவில் பட்டினியால் இறந்தனர்.

கூற்று 2: பஞ்ச காலத்தில் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை பிரிட்டனுக்கு ஆங்கில அரசு ஏற்றுமதி செய்தது

கூற்று 3: ஒரிசா பஞ்சமானது தாதாபாய் நௌரோஜியை இந்திய வறுமை குறித்து வாழ்நாள் ஆய்வை மேற்கொள்ள தூண்டியது

அ) 1, 2 ஆ) 1, 3 இ) இவற்றுள் எதுவுமில்லை ஈ) இவை அனைத்தும்

4) சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?

அ) அரவிந்த கோஷ் ஆ) தாதாபாய் நௌரோஜி

இ) ஃபெரோஸ் ஷா மேத்தா ஈ) லாலா லஜபதிராய்

5) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?

அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்

ஆ) G. சுப்ரமணியம் - விடிவெள்ளிக்கழகம்

இ) மிண்டோ பிரபு - பல்கலைக்கழகச் சட்டம், 1904

ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

6) தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது

அ) திலகர் ஆ) அன்னிபெசண்ட்

இ) பி.பி.வாடியா ஈ) எச்.எஸ். ஆல்காட்

7) அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார்?

அ) பி.பி.வாடியா ஆ) ஜவஹர்லால் நேரு

இ) லாலா லஜபதிராய் ஈ) சி.ஆர்.தாஸ்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



8) தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் தனது வெற்றிகரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய இடம்
அ) கேதா ஆ) தண்டி இ) சம்பரான் ஈ) பர்தோலி

9) 1923 இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர்.தாஸ் ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?
அ) சுயராஜ்ய கட்சி ஆ) கதார் கட்சி
இ) சுதந்திரா கட்சி ஈ) கம்யூனிஸ்ட் கட்சி

10) காந்தியடிகள் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு
அ) ஏப்ரல் 6, 1930 ஆ) மார்ச் 6, 1930
இ) ஏப்ரல் 4, 1939 ஈ) மார்ச் 4, 1930

11) முதலாவது பயணிகள் இரயில் 1853ல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது
அ) மதராஸ் - அரக்கோணம் ஆ) பம்பாய் - பூனா
இ) பம்பாய் - தானே ஈ) கொல்கொத்தா - ஹீக்ளி

12) முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

13) இரு நாடு கொள்கையை முதன்முதலில் கொண்டு வந்தவர்
அ) இராஜாஜி ஆ) ராம்சே மெக்டொனால்டு
இ) முகமது இக்பால் ஈ) சர் வாசிர் ஹசன்

14) பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க

| பட்டியல் - I | | பட்டியல் - II |
|---|---|---|
| அ) அன்னிபெசண்ட் | - | 1. அலிகார் இயக்கம் |
| ஆ) சையது அகமது கான் | - | 2. தயானந்த சரஸ்வதி |
| இ) கிலாபத் இயக்கம் | - | 3. பிரம்மஞான சபை |
| ஈ) சுத்தி இயக்கம் | - | 4. அலி சகோதரர்கள் |

அ) அ-3, ஆ-1, இ-4, ஈ-2 ஆ) அ-1, ஆ-2, இ-3, ஈ-4
இ) அ-4, ஆ-3, இ-2, ஈ-1 ஈ) அ-2, ஆ-3, இ-4, ஈ-1

15) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசிய வானொலி நிலையத்தை நடத்தியவர் யார்?
அ) உஷா மேத்தா ஆ) பிரீத்தி வதேதார் இ) ஆசப் அலி ஈ) கேப்டன் லட்சுமி

16) இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர் ______ ஆகும்
அ) சுபாஷ் படைப்பிரிவு ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு
இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு ஈ) ஜான்சிராணி படைப்பிரிவு

17) 1946 இல் இடைக்கால அரசாங்கம் யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டது
அ) ஜவஹர்லால் நேரு ஆ) மௌலானா அபுல்கலாம் ஆசாத்
இ) ராஜேந்திர பிரசாத் ஈ) வல்லபாய் படேல்

18) அரசமைப்பு நிர்ணயச் சபையில் குறிக்கோள் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்
அ) இராஜேந்திர பிரசாத் ஆ) ஜவகர்லால் நேரு
இ) வல்லபாய் படேல் ஈ) மௌலானா அபுல்கலாம் ஆசாத்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



19) இந்திய அரசாங்கம் ________ வகையான மேம்பாட்டிற்காக உறுதிபூண்டுள்ளது.
அ) முதலாளித்துவ ஆ) சமதர்ம இ) தெய்வீக ஈ) தொழிற்சாலை

20) பின்வருவனவற்றை காலவரிசைப்படுத்துக.
i) ஜமீன்தாரி முறை ஒழிப்புச் சட்டங்கள்
ii) அதிக விளைச்சலைத் தரும் வீரிய ரக விதைகளின் பயன்பாடு
iii) தமிழ்நாட்டின் முதல் நில உச்சவரம்புச் சட்டம்
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினைத் தேர்வு செய்க.
அ) ii, i, iii ஆ) i, iii, ii இ) iii, ii, i ஈ) ii, iii, i

பகுதி - ஆ

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண்.30க்கு கண்டிப்பாக விடையளி:-** **7×2=14**

21) தேசியம் என்றால் என்ன?
22) அவுரிகலகம் குறித்து குறிப்பு வரைக.
23) மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை' (The Mendicant policy) என்றால் என்ன?
24) அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.
25) மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞரை அடையாளப்படுத்துக?
26) 1923 இல் வாரணாசியில் நடைபெற்ற ஆறாவது இந்து மகாசபை மாநாட்டைப் பற்றி குறிப்பு எழுதுக.
27) லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?
28) ஜேவிபி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?
29) பூமிதான இயக்கம் பற்றி எழுதுக?
30) பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா குறித்து எழுதுக.

பகுதி - இ

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண்.40க்கு கண்டிப்பாக விடையளி:-** **7×3=21**

31) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிக்கைகளின் பங்கினை எழுதுக.
32) 1908 இல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம் பற்றி நீவிர் அறிவது யாது?
33) தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களைப் பற்றி விவாதிக்கவும்?
34) பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
35) டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக?
36) 1909 ஆம் ஆண்டின் மின்டோ-மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



37) இந்திய தேசிய காங்கிரசிலிருந்து சுபாஷ் சந்திரபோஸ் நீக்கப்பட்டதற்கான காரணங்களை விளக்குக.

38) இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?

39) இந்தியாவில் பசுமை புரட்சியின் விளைவுகள் யாவை?

40) பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக?

பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி:-** **7×5=35**

41) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப்-பொருளாதாரக் காரணிகளை ஆய்க. (அல்லது)

ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

42) அ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக

(அல்லது)

ஆ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

43) அ) டாக்டர் அம்பேத்காரின் கல்விப்பணி குறித்து குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக

(அல்லது)

ஆ) ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

44) அ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

(அல்லது)

ஆ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.

45) அ) சுதேச அர்சுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக. (அல்லது)

ஆ) சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.

46) அ) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க. (அல்லது)

ஆ) இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற கீழ்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்

1. பம்பாய் 2. சூரத் 3. லாகூர் 4. சென்னை (மதராஸ்) 5. அலகாபாத்

47) அ) முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ) 1900 முதல் 1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

*******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com